[1982 பிப்ரவரி 4

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல முறையில், பயன்உள்ள வகையில் செயல் பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை இன்னும் அதிக அளவில அமல்படுத்துவதற்கு, 100 குழாய்கள் எனபதோடு நிறுத்தி விடாமல், எந்த அளவிற்குத் தேவை இருக்கிறதோ அந்த அளவிற்கு அத்தகைய தேவைக்கேற்ற அளவிற்கு விஸ்தரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நிதி வசதியைப் பொறுத்து விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படும்.

கொடைக்கானல் 'டம்டம்' பாறை அருகே ஏற்படும் சாலை விபத்துக்களைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்.

*வினா எண். 34—**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலைப்பாதையில் 'டம்டம்' பாறை என்னுமிடத்தில் அடிக்கடி சாலை விபத்துக்கள் நடைபெறுகிறதா?

(ஆ) அதனைத் தடுக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளனவா ?

(இ) இதற்கு மாற்றுப்பாதையாக பூலத்தூர் - தும்மலப்பட்டி சாலை வேலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கி. மீ. 10/2–12/2 வரையுள்ள சாலையை அகலப் படுத்தும் பணி ஆண்டு 'பராமரிப்பு' நிதியிலிருந்து மேற்கொள்ளப படும்.

(இ) இச் சாலையை மாற்றுப் பாதையாக அமைக்க செயற் குறிப்பு ஒன்றும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொம்பக்கரையில் இருந்து கொடைக்கானல் வரையில் புதிய தார் பாதை அமைக்க அரசு ஏற்பாடு செய்ய இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி பூலத்தூர் தும்மலப்பட்டி சாலை பற்றியதாகும் ஆகவே, தனிககேள்வி போடவும்.

மாமுண்டி ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 35—திரு. மே. அ. இராசகுமார் மற்றும் திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையுளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை நகரம் - விடத்திலாம்பட்டி மாமுண்டி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

(இ) அதன் வேலை எப்பொது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். (ஆ) மற்றும் (இ) பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9·50)

திரு. மே. அ. இராசகுமார் : தலைவரவர்களே, நீண்ட காலமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இந்த அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நான் தொகுதி மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை விரைவில் முடித்துத்தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். 2-2-1981-ல் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து ஒரு சர்க்குலர் அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை சென்னை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை தலைமைப் பொறியியலாளர் விரைவில் முடிக்க வேண்டுமென்று அதிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்ப